Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -01 | 18-10-2003 | சனிக்கிழமை | ஓசை 242




– கனேடிய அமைச்சருடன் யாழ். ஆயர், அரச அதிபர்

## உரிய முறையில் அழைக்காமையே சந்திப்பு இடம்பெறாமைக்குக் காரணம்!

யாழ்.குடாநாட்டிற்கான வருகையை மேற்கொண்டிருந்த அந்நாட்டின்வெளிவிவகார அமைச்சரது பயணந் தொடர்பாக "உரிய முறையில் கனேடிய தூதுவராலயம் அறிவித்திருக்காமையினாலேயே யாழ். ஆயர் மற்றும் அரச அதிபர், யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் உள்ளிட்ட பொது அமைப்புக்களுடனான சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லையெனத் தெரியவருகின்றது.

கனடா நாட்டில் குடியேறியுள்ள ஈழத் தமிழர்ஒருவரே பொதுமக்களையும் குறித்த பிரதிநிதிகளைச் சந்திப்பது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

எனினும் உரிய அறிவுறுத்தல்களுடன் விஜயம் செய்யப்படும் இடங்கள் தொடர்பாக கனேடிய தூதுவராலயம் உரிய தகவல்களை வழங்காததால் குறித்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தில் இணைய முன்வந்த 13 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இணையச் சென்ற 13 சிறுவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பில் இணைவதற்காக வந்திருந்த 13 சிறுவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் கரடியனாறு தேனகம் வளாகத்தில் இடம்பெற்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உப தலைவர் செல்வி லைலாகட்லி ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன், மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் பிரபா மாவட்டத்துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கிருசன், நிதர்சனப் பொறுப்பாளர் ரஜீவன், வாழைச்சேனை அரசியல்துறைப்பொறுப்பாளர் சுதந்திரன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

சிறப்புத் தளபதி ரமேஸ் கருத்து தெரிவிக்கையில், நாம்பலமான நிலையிலேயே போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சமாதான

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இரு அமெரிக்க இராஜதந்திரிகள் குடாநாட்டிற்குத் திடீர் விஜயம்

## யாழ். அரச அதிபருடன் பேச்சு ஊடகவியலாளர்களைச் சந்திக்க மறுப்பு

**யாழ். குடாநாட்டிற்கான திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்க நாட்டு இராஜதந்திரிகள் இருவர் நேற்று வருகைதந்திருந்தனர். தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான அலுவலகத்தின் துணைத்தலைவரான ஜேம்ஸ்என்விஸ்டில் மற்றும் அவ்வலுவலகத்தின் இலங்கை விவகாரங்களுக்கான அலுவலர் ஜேம்ஸ் வோலர் ஆகிய இருவருமே நேற்று வருகை தந்திருந்த இருவருமாவர்.**

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்து இராஜதந்திரிகள் இருவரும்பேச்சுக்களை நடாத்தினர். ஆயினும் ஊடகவியலாளர்களை சந்திக்க அவர்கள் மறுத்துவிட்டனர்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை மற்றும் மக்களது எதிர்பார்ப்புக்கள், சமாதான முன்னெடுப்புக்கள் என்பவை தொடர்பாகவே விபரங்களை அவர்கள் கேட்டறிந்திருந்ததாக யாழ். அரச அதிபர் பின்னர் ஊடகவியலாளர்களிடையே தெரிவித்தார்.

பின்னர் மீள் புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை பார்வையிட்டபின்னர் அவர்கள் கொழும்பு திரும்பினர்.

முன்னதாக விசேட விமானப் படை விமானம் மூலம் பலாலி வந்தடைந்த அவர்கள் யாழ். மாவட்ட படைகளின் தலைமையுடன் பேச்சுக்களை நடாத்தியிருந்ததாகத் தெரிய வருகின்றது. (27)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலானகுழு இன்று வன்னி திரும்புகின்றது

இடைக்கால நிர்வாக திட்ட வரைவு தொடர்பாக சட்டவல்லுநர்களுடன் ஆராய அயர்லாந்து சென்றிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் இன்று வன்னி திரும்புகின்றனர்.

கடந்த இரண்டாம் திகதி கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட இவர்கள் முன்னர் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக திட்ட வரைவில் தேசியத் தலைவர் அவர்கள் மேற்கொண்ட திருத்தங்கள் தொடர்பாக வெளிநாட்டிலுள்ள தமிழ் சட்டவல்லுநர்களுடனும், சர்வதேச

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டு விபரீதமானதால் சிறுவன் பரிதாப மரணம்

(வவுனியா செய்தியாளர்)

விளையாட்டு விபரீதமானதால் வவுனியாவில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா திருநாவற்குளத்தைச் சேர்ந்த வசந்தகுமார் கிரிசாந்தன் (வயது12) என்ற சிறுவன் வீட்டில் யாருமில்லாத வேளையில் தம்பியுடன் சேர்ந்து மாடுகட்டி விளையாடி உள்ளார். அப்போது மாடாக விளையாடிக்கொண்டிருந்த கிரிசாந்தனின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிறு திடீரென இறுகியதால் சிறுவன் குரல்வளை நெரிக்கப்பட்டமையால் மயக்கமடைந்தார். இவ்விப

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசித்தபின் உ.பா.வலயம் குறித்து முடிவு

### கூட்டமைப்பினரிடம் ரணில் தெரிவிப்பு

யாழ். உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக மூத்த அமைச்சர்களுடனும் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்திய பின் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் எடுப்பதாக அறிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் மாலை பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

இக்கலந்துரையாடல் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெற்றதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் பல விடயங்கள் பற்றி கலந்துரையாடியிருப்பினும் இடம் பெயர்ந்தோர் மீளக்குடியமர்தல் பற்றியே முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. உடன்படிக்கை கைச்சாத்தாகி 20 மாதங்களாகியும் இடம்பெயர்ந்தோர் அகதிகள் முகாம்களிலும், நலன்புரிச் சங்கங்களிலும் வாழ்ந்து வருவதாக இராசம்பந்தன் எடுத்துக் கூறினார். நாட்டின் மற்றப் பகுதிகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம் இடம்பெயர்ந்த வடகிழக்கு மக்களிடம் பிடுங்கிக் கொள்ளப்பட்டுள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் செல்வாக்கை வெளிக்காட்ட பேரணி நடத்த சுதந்திரக் கட்சி முடிவு

(கொழும்பு)

சனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் மட்டுமல்ல, மக்கள் செல்வாக்கும் இருப்பதை வெளிக்காட்டும்முகமாக எதிர்வரும் 24 ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிரான பேரணியொன்றை கொழும்பில் நடத்த இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று அந்தக் கட்சி ஊடக மாநாட்டை நடாத்தியது. இதில் கருத்துத் தெரிவித்த கட்சியின் செயலாளர் தமது பேரணிக்கு ஆதரவை வழங்கும் பொருட்டு மக்கள் விடுதலை முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் எதிர்வரும் 24ஆம் திகதியில் இருந்து டிசம்பர் 16ஆம் திகதிவரை நடத்தப் படும் எனவும் அவர் தெரிவித்தார். (3)

## நிமலராஜன் கொலை விசாரணை இழுத்தடிப்புக்கு எதிராக மறியல்

யாழ்.குடாநாட்டு பத்திரிகை செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து நேற்று மறியல் போராட்டம் இடம்பெற்றுள்ளது. ஊடகவியலாளர் நிமலராஜனின் 3ஆம் ஆண்டு நினைவுதினம் நாளையாகும். இதனையொட்டி யாழ்.குடாநாட்டு ஊடகவியலாளர் சங்கம் நிமலராஜன் படுகொலை விசாரணை இழுத்தடித்துச் செல்லப்படுவதைக் கண்டித்து யாழ். செயலகத்திலுள்ள தகவல் திணைக்களம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தில் பத்திரிகையாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

-தமிழ் இலக்கிய பெருவிழாவில்-

## கிளிநொச்சி முல்லை மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமைக்குக் கண்டனம்

வவுனியாவில் நேற்று ஆரம்பமாகிய வடக்கு- கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கு கிளிநொச்சி மாவட்ட கலை இலக்கிய படைப்பாளிகள், அரங்காற்றுகை கலைஞர்கள் சார்பில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா அரசஅதிபர் ஊடாகஏற்பாட்டுக்குழுவுக்கு- கிளிமாவட்ட அழகியல் கலாமன்றம் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடகிழக்கு மாகாண தமிழ் இலக்கிய செயற்பாட்டிற்காக எமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இருந்தும் இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட கொடூர யுத்தத்தின் கோரப்பற்களால் நசிபுண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற கட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்குண்டு

நல்லின மரக்கறி மற்றும் பழமரநாற்றுக்கள் தென்னிலங்கை பயிர்கள் ஒட்டுசெய்த பழப்பயிர்கள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுஜீதா விதைபொருள் நாற்று உற்பத்திப் பண்ணை,26/4 புதிய புன்னைநீராவி-விசுவமடு உரிமையாளர் மு.கந்தசாமி. (3107)

### அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல், பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் போன்றன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு:- பரந்தன்வீதி, புதுக்குடியிருப்பு. (3713)


# கிளி-சாந்தபுரம் கிராமத்தில் பொது மண்டப அடிக்கல் நாட்டல்

ஊரகமேம்பாட்டுப் பிரிவின் அனுசரணையுடன் சாந்தபுரம் கிராம மக்களினால் மேற்படி கிராமத்தில் பொது மண்டபம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப.2.00 மணிக்கு சாந்தபுரம் கி.மு.சங்கத்தலைவர்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

ஈகச் சுடரினை ஊரக மேம்பாட்டு பிரிவைச் சேர்ந்த பாவலன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை ஊரக மேம்பாட்டுப்பிரிவைச்சேர்ந்த அன்புமாறன் ஏற்றிவைத்தார். கிளி.கரைச்சி பிரதேசச்செயலர்பொன். நித்தியானந்தன் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பொதுமண்டபத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். நிகழ்வில் கிராமமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி.இல் நடமாடும் சேவைமூலம் 155 பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டத்தில் நடமாடும் சேவைமூலம் (மோட்டார்சைக்கிள்) சாரதி அனுமதிப்பத்திரததிற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளில் 155பேர் சித்தியெய்தியுள்ளதுடன் அவர்களுக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டது.கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெற்ற



சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான 266 விண்ணப்பதாரிகளுக்கு நடைபெற்ற எழுத்துப்பரீட்சை செயன்முறைப்பரீட்சையில் 155பேர் சித்தியெய்தி சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டனர். மேற்படி பரீட்சையில் மோட்டார்வாகன பரீட்சகர்களான எஸ்.எஸ்.ஆர். றணசிங்க, றி.எம்.எஸ்.கே. தென்னக்கோன், ஆ.எ.றி.குலாஸ், யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையர் வி. பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.இச்சேவையின்போது காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் கலந்துகொண்டு காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (சோ)

# விதைநெல்லைப் பெறமுடியாது வவு.வில் விவசாயிகள் திண்டாட்டம்

காலபோக நெற்செய்கை ஆரம்பமாகி உள்ள இவ்வேளையில் வவுனியாவில் உள்ள விவசாயிகள் விதைநெல்லைப் பெறமுடியாது பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வவுனியாவில் உள்ள அரசினர் விதை நெல் நிலையங்களிலும், கமநலசேவை நிலையங்களிலும் விதை நெல் முடிவடைந்துவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். வவுனியாவில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கவென அரசினால் அனுப்பிவைக்கப்பட்ட சிபார்சு செய்யப்பட்ட புதிய நெல் இனங்களை மேற்குறிப்பிட்ட நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மொத்தமாக விற்பனை செய்துள்ளனர். இதனாலேயே வவுனியா விவசாயிகள் விதை நெல்லைப் பெறமுடியாது சிரமப்படுகின்றனர். அதிகாரிகளின் இந் நடவடிக்கை குறித்து விவசாயிகள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (10)

# காணாமல் போன சிறுவன் சடலமாக மீட்பு

திருகோணமலையில் அன்பு வெளிப்புறம் பகுதியில் வைத்து கடந்த வாரம் காணாமல் போனதாக கூறிய 07 வயது பாடசாலை மாணவன் சடலமாக புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கோரமான நிலையில் இச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வி நிருத்திகா பசுபதிப்பிள்ளை

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

அகில இலங்கைரீதியாக நடைபெற்ற 2003 ஆம் ஆண்டின் தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் கலந்து கொண்டு நான்காம் பிரிவின் சிறுகதை ஆக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்று எமது மாவட்டத்திற்கும், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் பெருமை சேர்த்த எமது மாணவி செல்வி நிருத்திகா பசுபதிப்பிள்ளை அவர்களை மனமாறப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவர் கல்வியோடு, சகல துறைகளிலும் முன்னேறி சாதனை படைக்க எமது நல்லாசிகள்.

ஆசிரியர் ஒன்றியம்
கிளி/கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி.

(சி-8299)


## முத்தமிழ் கலையரங்கம்

புலிகளின்குரல் வட்டக்கச்சிப் பிரதேச வானொலி மன்றம் நடாத்தும் முத்தமிழ்க் கலையரங்கம் வட்டக்கச்சிப்பிரதேச அரசியல் துறையினரின் ஆதரவில் (இன்று) இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இம் முத்தமிழ்க்கலையரங்கில் உரைகள், அறிமுகவுரை.சிறப்புரை என்பனவற்றுடன் மாவீரர்வணக்கநடனம், கவியரங்கம், வாத்தியப் பிருந்தா, வில்லிசை, சிறுவர் நாடகம், நாடகம், என்பனவும் இடம்பெறவுள்ளன.

## கண்டெடுப்பு

கந்தையா நடராசா தே.அ.அட்டை இல 500694050V புதுமுறிப்பு உருத்திரபுரம் என்பவரது தே.அ. அட்டை வவுனியாவில் வைத்து தே.கிருபா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமூகம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)

## நிலையம் திறப்பு

காராளி செயற்கை முறையில் சினைப்படுத்தும் சேவை நிலையம் அண்மையில் வட்டக்கச்சி கமநல சேவை நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனவே கால்நடைப் பண்ணையாளர்கள் செயற்கை முறையில் தங்கள் கால் நடைகளை சினைப்படுத்தலாம் என தெரிவித்துள்ளார். காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலைய திட்ட இணைப்பாளர் மா.மகாதேவன் அவர்கள். (05)


## 2ஆம் ஆண்டு நினைவில்

தோற்றம் 1926 05 03



மறைவு 2001 10 18

நாட்டுப்பற்றாளர், சமூகமாமணி

### அமரர் திரு. முருகேசு கந்தசாமி

*(முன்னாள் கிளி. சுகாதார வைத்திய அதிகாரி)*

*பிறப்பவர்கள் இறப்பது நியதிதான் என்றாலும்*
*ஒரு நிமிடம் உங்களை மறக்க முடியாது ஐயா!*
*"மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" என*
*அல்லும் பகலும் உழைத்த ஐயாவே!*
*ஈர்ஆண்டுகள் சென்றாலும்*
*மறப்போமா உங்கள் பணியை!*

கிளி.சுகாதார வைத்திய அதிகாரியும், பணியாளர்களும்.

(சி-8663)



# பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளுக்கெதிராக ஐ.நா.இல் நடவடிக்கை

## இந்தியா-தென்னாபிரிக்கா கோரிக்கை

(நியூயோர்க்)

**பயங்கரவாதிகளை ஆதரித்து அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளுக்கு எதிராக ஐ.நா அமைப்பிற்குள்ளேயே நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவும், தென்னாபிரிக்காவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க சனாதிபதிக்கும் பிரதமர் வாஜ்பாயிற்குமிடையே புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பி'ஃயே இது சம்பந்தமாகக் கூட்டுப் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தக உடன்பாட்டினை செய்து கொள்ளவும், அடுத்த ஆண்டிற்குள் 100 கோடி மதிப்பிற்கு வர்த்தகத்தை இருமடங்கு அதிகரிக்கவும் இரு நாடுகளும் இணங்கியுள்ளன. அத்துடன் குற்றவாளிகளை விசாரணைக்காக நாடு திருப்பி அனுப்புவது, இருதரப்பு சட்ட உதவிகள், எண்ணெய் கண்டுபிடிப்புப்பணி, கலாச்சாரம், மின்சாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு போன்ற ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல்-பலஸ்தீனம் குறித்த இரு தீர்மானங்கள் அமெரிக்கா வீட்டோவால் நிராகரித்தது

(ஜெருசலேம்)

மேற்குக் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு மதில் ஒன்றை இஸ்ரேல் அமைப்பது தடைசெய்யப்பட வேண்டும் என்ற வகையில் பாதுகாப்பு சபையில் பலஸ்தீனப் பிரதிநிதி சமர்ப்பித்த தீர்மானம் ஒன்றை அமெரிக்கா அதன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்துள்ளது.

இஸ்ரேலிய குடியேற்றத் திட்டங்களுக்குள் 600 புதிய வீடுகளை அமைக்கும் திட்டமும் இந்த வீட்டோ அதிகாரப் பிரயோகத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது. இப்பிரேரணை சம்பந்தமான விவாதத்தின் போது சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு விவாதம் பிற்போடப்பட வேண்டுமென அமெரிக்கா வற்புறுத்திய போதிலும் அரபு நாடுகள் இவ்விடயம் தொடர்பாக உடனடி வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இஸ்ரேலின் முன்னாள் பிரதம மந்திரி சிமோன் பெரஸ் லொஸ் ஏஞ்சலில் யூத சம்மேளனத்திற்குக் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையில், பலஸ்தீன சனாதிபதி அரபாத் பதவி நீக்கம் செய்யப்படக் கூடாதெனத் தெரிவித்துள்ளார். அத்துடன் பலஸ்தீன இராச்சியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் வரவேற்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். மத்திய கிழக்கு நிலைமை தொடர்பாக அமெரிக்காவில் வாழும் யூதத் தலைவர்களைச் சந்திப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பலஸ்தீனப் பிரதமர் அகமத்கூரே தலைமையிலான நிர்வாகத்திற்கு அதிகாரத்தை வழங்குவதற்காக அரபாத் பதவி நீக்கம் செய்யக் கூடாதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சத்திர சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட குழந்தைகள் கோமா நிலையில்

(கெய்ரோ)

தலைகள் ஒட்டிப் பிறந்து சத்திர சிகிச்சை மூலம் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட எகிப்திய குழந்தைகளை கோமா நிலையில் இருந்து மீட்கும் முயற்சிகளில் அமெரிக்க வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.


இதற்காக இரண்டு வயது நிரம்பிய இரட்டைக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன.


அகமட்-முகமட் என்ற பெயர்களைக் கொண்ட இந்தக் குழந்தைகள் தலாஸ் மாநில வைத்தியசாலையில்கடந்த ஞாயிறன்று வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன.

# விண்வெளி வீரருடன் "புனித கலன்-5" சீனாவால் விண்ணில் ஏவப்பட்டது

(மொஸ்கோ)

விண்வெளி வீரருடன் தனது முதல் விண்கலத்தை சீனா விண்ணில் செலுத்தி வெற்றிகண்டுள்ளது. இதனூடாக விண்வெளி வீரருடன் விண்ணுக்கு விண்கலத்தைச் செலுத்திய மூன்றாவது நாடு என்ற பெருமையையும் முதல் ஆசிய நாடு என்ற பெருமையையும் சீனா பெற்றுள்ளது.





இராணுவத்தைச் சேர்ந்த ஜங்லிவே என்ற 38 வயதான விண்வெளி வீரருடன் புனித கலன்-5 என்ற இந்த விண்கலத்தைச் சீனாவின் லோங்மாஸ்ரக ராக்கெட் கடந்த புதன்கிழமை விண்ணில் செலுத்தியுள்ளது.

885 மீற்றர் நீளமும், 7790 கிலோ எடையும் கொண்ட இந்த விண்கலம் சிறிய ராக்கெட்டுக்கள் மற்றும் பரசூட்களைக் கொண்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்கலம் ஏவப்பட்ட பத்து நிமிடங்களிலேயே ராக்கெட்டில் இருந்து பிரிந்து விண்வெளியில் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட சுற்றுப்பாதையை அடைந்து சீராக இயங்கி வருவதாக சீனா அறிவித்துள்ளது. இந்த விண்கலம் 90 நிமிடத்துக்கு ஒரு தடவை பூமியை முழுமையாகச் சுற்றி வந்து கொண்டிருப்பதாகச் சீனா தெரிவித்துள்ளது.

1961 ஆம் ஆண்டில் ரஷ்யா விண்வெளி வீரருடன் முதல் விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியிருந்தது. அதனைத் தொடர்ந்து 1962 ஆம் ஆண்டு அமெரிக்கா விண்வெளி வீரருடன் விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியிருந்தது. தற்போது 41 ஆண்டுகளுக்குப் பின்னர் சீனா விண்வெளி வீரருடன் விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியுள்ளது.



அயோத்தி நகரில் காவல் கடமையில் மேலதிக பொலிசார்.

# பயங்கரவாத அச்சுறுத்தல் ஈராக்கில் தணியவில்லை

## அமெ.சனாதிபதி தெரிவிப்பு

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல் ஈராக்கில் இன்னும் தணிந்துவிடவில்லை என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கில் இருந்து அமெரிக்கர்களை வெளியேற்றும் நோக்கில் நடத்தப்படும் தாக்குதல்களால் அச்சம் கொள்ளப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

சனாதிபதித் தேர்தலுக்காக நிதி திரட்டும் நோக்கில் கலிபோர்னிய மாநிலத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தலைவர் நேற்று முன்தினம் காசா பள்ளத்தாக்கில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலைக் கண்டித்து பேசினார். இந்த சம்பவத்தில் அமெரிக்க பிரஜைகள் மூன்று பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் படகு விபத்தில் நியூயோர்க்கில் 10 பேர் பலி

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் இடம்பெற்ற பயணிகள் படகு விபத்தில் பத்துப் பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

மன்கற்றன் பகுதியில் இருந்து புறப்பட்ட இந்தப் படகின் பயணத் தூரம் முடிவடைவதற்குச் சுமார் ஐந்து மைல் இருக்கும் போது இந்த விபத்து நடந்துள்ளது.

வேகமாக காற்று வீசியதால் படகு பாலம் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



நியூயோர்க் கடலில் மூழ்கி மீட்கப்பட்ட பயணிகள் கப்பல்.

# தேர்தலை நடத்திப் புதிய அரசை ஆட்சிப் பீடம் ஏற்றுவதே சிறந்தது

## -ஈராக் குறித்து அமெ.நிர்வாகக் குழுத் தலைவர்

(பாக்தாத்)

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி புதிய அரசாங்கம்,ஒன்றை ஆட்சிப் பீடம் ஏற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட பாக்தாத் நிர்வாகக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அமெரிக்கா முன்வைத்துள்ள ஈராக் மீதான தீர்வுத்திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஆதரவு கிடைக்கும் வரை தேர்தல் நடத்துவது கடினமானது என்று தலைவர் சியாட் அலவி தெரிவித்துள்ளார்.

ஈராக்கை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்திற்கு உலகநாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் குறைந்த பட்சம் ஒன்பது வாக்குகளை அமெரிக்கா பெற்றாக வேண்டும்.

பாதுகாப்பு சபையின் அங்கீகாரத்தைப்பெற அமெரிக்கா நீண்ட நாட்களாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

# ஈரானுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது

## -ஐ.நா.அணுவாயுத கண்காணிப்பு அதிகாரி

(நியூயோர்க்),

இரகசிய அணுவாயுதங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்காக ஈரானுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்படும் என அந்நாடு எதிர்பார்க்க முடியாது என ஐக்கிய நாடுகள் அணுவாயுத கண்காணிப்பு நிறுவனத்தின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

அணுகுண்டை தயாரிப்பதற்கு முயல்வதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஈரான் மறுத்துள்ளது.

ஆனால் ஐக்கிய நாடுகள் அமைப்பான சர்வதேச அணுவாயுத நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு தமது அணு ஆலைகளின் விபரங்களை வெளியிட மறுத்து வருகின்றது. என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வைரஸ்கள் பற்றி

சார்ஸ் நோய்க்குக் காரணம் கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வைரஸ் இக் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு வைரஸ்கள் சாதாரண தடிமனை ஏற்படுத்துகின்றன. 11 வைரஸ்கள் விலங்குகளைப் பீடிக்கக் கூடியது. சீனாவில் பல்வகையான விலங்குகளை மக்கள் அறுத்துச் சாப்பிடும் வழக்கம் இருப்பதால் மனிதர்களை இவ்விலங்குகளில் காணப்படும் வைரஸ்கள் தொற்றலாம் என மருத்துவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். அவர்களது கணிப்பின்படி சார்ஸ் நோய் எப்போது வேண்டுமானாலும் உயிர்த்தெழலாம். இம் மிருகங்களில் சீனர்கள் விரும்பிப் புசிக்கும் புனுகு பூனை மூலம் சார்ஸ் மனிதர்களைப் பீடிக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆதலால் இவற்றை அறுப்பதோ விற்பதோ சீனாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் எந்தவொரு மிருகத்தில் காணப்படும் கொரோனா வைரசும் நேரடியாக மனிதனைத் தொற்றமுடியாது. ஆனால் புனுகு பூனை வைரஸின் விருத்தியும் மாற்றமும் ஏற்பட்டு மனிதனுக்குத் தொற்றலாம் என வைத்திய விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர். ஆனால் இன்று வரை சார்ஸ் வைரஸ் எங்கிருந்து வந்தது என்பதை எவரும் ஆதாரத்துடன் நிரூபித்ததில்லை. இங்கே எந்தெந்த விலங்குகளின் உடலில் எவ்வகையான வைரஸ்கள் வாழ்கின்றன என்பதைப் பின்வரும் விபரங்கள் மூலம் அறியலாம்.

வான்கோழி கொரோனா வைரஸ்:-

இது வளர்ப்பு வான்கோழிகளைப் பீடிக்கும். விரைவாகப் பரவக் கூடியது. பசியின்மை,மனஅழுத்தம் என்பவற்றை ஏற்படுத்தும். மரணம் சம்பவிக்கலாம்.

**தொண்டை அழாச்ச வைரஸ்:-**

கோழிகளிடையே விரைவில் பரவக் கூடிய சுவாசக் குழாய் மற்றும் ஈரலைப் பாதிக்கும். 25 வீதமான கோழிகளுக்கு மரணம் ஏற்படுத்தும்.

**மஞ்சள் காமாலை வைரஸ்:-**

இது எலிக்குஞ்சுகளைத் தாக்கிக் கொல்லக் கூடியது. வேகமாகப் பரவி நோய் எதிர்ப்புச் சக்திகளை வலுவிழக்கச் செய்யும்.

**போவின் கொரொனா வைரஸ்:-**

கன்றுகளிலும் பசுக்களிலும் வயிற்றுப் போக்கை ஏற்படுத்துவது பசியின்மை,மனஉளைச்சல் என்பவற்றைத் தரக்கூடியது.

**எலி கொரொனா வைரஸ்:-**

எலிகளிடம் காணப்படும். அனேகமாக மரணத்தை ஏற்படுத்தக் கூடியது.

**கேனின் கொரொனா வைரஸ்:-**

இது நாய்களில் நோயை ஏற்படுத்தும். இதனால் மரணம் ஏற்படும் விகிதம் குறைவு.

**போர்சின் வைரஸ்:-**

இது மூன்று வகைப்படும். பன்றிகளைப் பீடித்து மோசமான வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும், வாந்தி உண்டாகும், குட்டிகளைத் தொற்றி மரணத்தை விளைவிக்கும்.

**பிரிடோனி வைரஸ்:-**

இது பூனைகளில் நோயை ஏற்படுத்தி மரணத்தை விளைவிக்கும்.

**ரெபிட் கொரொனா வைரஸ்:-**

இது முயல்களைப் பாதித்து வயிற்றோட்டம், மார்பில் நீர் கட்டுதல், இதய தசை நார்களின் செயற்பாட்டுக் கோளாறு என்பவற்றை ஏற்படுத்தும்.

**மனித கொரொனா வைரஸ் 229E மற்றும் OC 43:-**

இது மனிதனைப் பீடிக்கும். இவ்விரு வைரசுகளே 10 முதல் 30 வரையான தடிமனை ஏற்படுத்துகின்றன. HCV-OC43 வைரஸ் வயிற்றில் நோயை ஏற்படுத்தும்.

## பேச்சு மொழி,எழுத்து மொழி

பேசப்படுகின்ற மொழி பேச்சு மொழியாகும். எழுதப்படுகின்ற மொழி எழுத்துமொழியாகும். பெரும்பாலும் இலக்கிய மொழியையே எழுத்து மொழியென என்னுகிறோம்.

தமிழ் மொழி பேச்சுமொழி, எழுத்துமொழியென இருவகைப்படும். இரண்டும் இரண்டாகும். நாம் இலக்கியத் தமிழில் அன்றாடம் பேசுவதில்லை.பேசசுத் தமிழையே பேசுகிறோம். இலக்கியத் தமிழை எழுதுகிறோம். இதை எழுத்துத் தமிழ் என்கின்றோம். இரண்டு தமிழுக்கும் இலக்கணம் உண்டு. பேச்சு மொழியும் எழுத்து மொழியும் முக்கியமானவை. எழுத்துத் தமிழுக்கு இலக்கண நூல்கள் அதிகமாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் பேச்சுத் தமிழுக்கு மிகவும் குறைவாகவே இலக்கண நூல்கள் எழுதப்பட்டுள்ளன.


எழுத்துத் தமிழ் பொதுவாக எங்கும் ஒரே மாதிரியே எழுதப்படுகின்றது. ஆனால் பேச்சுத் தமிழ் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகிறது. இதனைக் கிளை மொழி என்கின்றோம்.

## ஆறு கால்களுடன் பசுக்கன்று



ஆறு கால்களுடன் காம்போஜ நாட்டுக் கமக்காரர் ஒருவரின் பண்ணையில் பிறந்துள்ளது, இந்தப் பசுக்கன்று .ஒரு பௌத்த விகாரைக்கு அந்தக் கமக்காரர் வளர்ப்பதற்குக் கொடுத்துள்ளார். இரண்டு மாத வயதுடைய கன்று திடகாத்திரமாக உள்ளது.

## நவீன தொலைநோக்கி



இங்கு காணப்படுவது நவீன தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய தொலை நோக்கியாகும். இது கையில் கொண்டு செல்லக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

குருவி போன்ற சிறு பறவைகளை மட்டுமன்றி நூறு ஒளி ஆண்டு தூரத்தில் இருக்கும் நட்சத்திரங்களையும் இதன் மூலம பார்க்க முடியும்.

இச்சிறு தொலை நோக்கியின் நிறுத்தியின் உயரத்தை 4 மீற்றர் முதல் 20 மீற்றர் வரை மாற்றிக் கொள்ள முடிவதுடன் இதன் வில்லையின் மூலம தெளிவான காட்சிகளையும் காண முடியும். அன்றியும் தொலை தூரத்தில் உள்ள பொருள் ஒன்றை 15, 45.75, 225 என்ற அளவுகளில் பெரிதாக்கியும் காணலாம். மங்கிய ஒளியிலும் தெளிவான முறையில் பொருட்களை இதன் மூலம் காண முடியும். இலங்கை தேசிய புவியியல் மையம் இதனை வெளியிட்டுள்ளது.

# லேசர் கதிர்களின் பயன்பாடு

லேசர் கதிர்களின் மிக நீண்ட பயன்பாட்டை நாம் அறிந்திருக்கின்றோம்.

கட்டிகளை நீக்கவும், அல்ஷைரைக் குணப்படுத்தவும், ஸ்கான் சிகிச்சையிலும் லேசர் கதிர்கள் பிரதானமாய் பயன்படுத்தப்படுகின்றன.

லேசர் என்பது வெறும் ஒளிதான். அதற்கு ஏன் அப்படி ஒரு பெரும் பெயர்..., பாராட்டு....என்று நோக்கினால் காரணங்கள் பல இருப்பதைக் காணமுடியும்.

லேசர் ஒளிக்கற்றைகள் சீரான அளவில் பாய்கின்றன. அது சம திசைகளாய் சீரான முறையில் பயன்படுகிறது என்பது முதல் காரணமாகும்.

லேசர் கதிர்களுக்கு இத்தகைய சிறப்பான ஆற்றலை தருவது அதன் சீரான கதிரின் பாய்ச்சல் தான்.

லேசர் கதிர்களில் பலவகை இருக்கின்றன.

(a) வாயு
(b) திடம்
(c) நீர்நிலை என்பன

அவையாகும்.

ஒளி அணுக்களால் "பொடோன்" எனும் ஒளித்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதிகப்படியான பொடோன் எனும் ஒளித்துகள்கள் உற் பத்தி செய்யப்பட்டு, பாய்ச்சப் படுகையில், சீரான அளவிலான ஒளிக்கதிர்கள் உருவாகின்றன.

கண் சிகிச்சைக்கு லேசர் கதிர சிகிச்சை மிகவும் சௌகரியமானது என்று பயன்படுத்தப்படுகின்றது.

கண்ணில் மெல்லிய தண்ணீர் திரவம் தேங்கி பார்வையை மறைக் கின்றது. இது ஒரு நோயாகும்.

இந்த நோயைக் குணப்படுத்த லேசர் கதிர் பயன்படுத்தப் படுகின்றது. இதன் போது சர்வ சாதாரணமாக லேசர் கதிர் மூலம் இந்நோய் குணமாக்கப்படுகின்றது.

கண் சிகிச்சை நிபுணர் முதலில் ஓர் தனி லேசர் கதிர் மூலம் கண்ணின் திரையில் கறை படிந்திருக்குமிடத்தை அறிகின்றார்.

மீண்டும் மற்றொரு கதிரின் மூலம குறிப்பிட்ட இடத்தில் பாய்ச்சுகின்றார்.

இது முன்னைய லேசர் கதிரை விட கூடுதல் சக்தி வாய்ந்தது.

கண்திரையை மறைத்திருக்கும் இந்த தண்ணீர்த்திரவம் இந்த அழுத்தத்தினால் நீக்கப்படுகின்றது.

ஒளியின் எல்லா வடிவங்களைப் போல வும் லேசர் ஒளியும் மெசைஸ் தளங் களில் நேரடியாக ஊடுருவிச் செல்ல மாட்டாது.

பிளாஸ்ரிக் பைப், கண்ணாடி ஒடுகள் என்பன ஒளியை உட்செலுத்துவதற்கு உதவுகின்றன. இவையே லேசர் ஒளிக்கதிர்களை உடலுக்குள் செலுத்தி,குறிப்பிட்ட இடத்தை குணப்படுத்த ஏது செய்கின்றது.

இதற்கு பயன்படும் இன்னொரு கருவி "என்டோஸ்கோப்"என்று அழைக்கப்படுகின்றது.

இந்தக் கருவி மூலம் ஒளியை தேவையான திசைக்கு பாயச் செய்து, குறிப்பிட்ட பாகத்திற்கான சிகிச்சையளிக்கப்படுகின்றது.

ஷெல்களில் திரண்டிருக்கும் தண்ணீர், மாலிக்குல்களைச் சூடாக்கும் பணியை இந்த லேசர்கதிர்கள் செய்கின்றன. வெப்பத்தில் ஷெல்கள் அழுத்தத்திற்கு உட்பட்டு வெடிக்கின்றன. இந்த நுட்பமான லேச சிகிச்சை பாரம்பரிய மருத்துவக் கோட்பாடுகளை மொத்தமாய் மாற்றியிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## மூளை நரம்பைத் துண்டித்து வலி மறக்க வைக்கும் சிகிச்சை

மூளை நரம்பை கதிர் வீச்சு மூலம் துண்டித்து, வலியை மறக்கடிக்கச் செய்யும் புதிய சிகிச்சை முறையை ஏற்படுத்தியுள்ளனர்.

உடல் வலியைப் பல வகையில் அனுபவித்தும் இருப்பீர்கள். வலி ஏற்படுவது எப்படி? என்பது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்தது. இங்கிலாந்து பிர்மிங்காம் பெண்கள் மருத்துவமனை மேற்கொண்ட தேசிய ஆராய்ச்சியில் நரம்பு தொடர்புடையதான வலி கண்டு பிடிக்கப்பட்டது. வலி உணர்வை மூளையிலிருந்து நரம்பு ஒன்றுதான் தருகிறது. அந்த நரம்பைக் கதிர் வீச்சு மூலம் துண்டித்து, வலியை மறக்கடிக்கப் புதிய சிகிச்சை முறையையும் ஏற்படுத்தியுள்ளனர்.

## ஆற்றிலிருந்து நெருப்புக் கோளம் தோன்றுவது எப்படி?

தாய்லாந்து நாட்டில் ஓடும் ஒரு நதியிலிருந்து ஆண்டுக்கு ஒருமுறை நெருப்புக் கோளம் தோன்றும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இதனை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்துள்ளார்கள்.

தாய்லாந்து நாட்டில் மியாங் எனும் நதி ஓடுகின்றது. அந்த நாட்டின் எல்லைப்பகுதியான போன்வியாரி எனும் ஆற்றிலிருந்து ஆண்டுக்கு ஒருமுறை நெருப்புக் கோளங்கள் தோன்றுவது வழமையாகும்.

புத்தபிரான் வானத்திலிருந்து பூமியை நோக்கி வருவதை எடுத்துக் கூறுவதன் பொருட்டு, நாகதேவதைகள் நெருப்புப் கோளத்தை உமிழ்வதாக தாய்லாந்துமக்கள் நம்புகின்றார்கள். ஆனால் இந்த சம்பவத்தை ஆராயும் அறிவியல் வல்லுநர்கள், பூமிக்கு அடியிலுள்ள மெதேன் வாயு வெளிப்படும் போது காற்றிலுள்ள ஒக்ஸிசனுடன் கலப்பதால் நெருப்புக் கோளங்கள் ஏற்படுவதாகக் கூறியுள்ளார்கள்.

## செவ்வாயில் ஆய்வு

செவ்வாய்க் கிரகத்தின் வடபகுதியை ஆராய 2007 ஆம் ஆண்டில் விண்கலம் ஒன்றை அனுப்ப நாசா என்ற அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் முடிவு செய்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பனியையும், மண்ணையும் அது ஆராயும்.

ஆளில்லாத பினிக்ஸ் லேண்டர் என்ற விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் 2008 இல் இறங்கும். செவ்வாய்க் கிரகத்தில் தரைக்கு அடியில் உள்ள அங்கக் அனங்கப் பொருட்களின் மாதிரிகள் சேகரிக்கப்படும்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருப்பதற்குச் சாதகமாக எப்போதாவது அங்கு தண்ணீர் இருந்ததா என்று "ரோவர்ஸ்" என்ற விண்கலம் ஏற்கனவே கொண்டு சென்ற ஸ்பிரிட் ஒபர்ச்சுனிட்டி என்ற ஆய்வு வாகனங்கள் எதிர்வரும் ஜனவரியில் எதிரெதிர் திசையில் இறங்கி ஆய்வுகளை மேற்கொள்ளும்.

நாசா அனுப்பிய "குளோபல் சர்வேயஸ்", "ஓடிசி" என்ற இரு கலங்கள் செவ்வாய்க்கிரகத்தை இப்போது வலம் வருகின்றன. அத்துடன் படங்களையும் எடுத்து அனுப்பி வருகின்றன.

ஜப்பான் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா அனுப்பிய "லேண்டர்" ஆகிய கலங்கள் இவ்வாண்டு டிசம்பர் இறுதியிலோ அடுத்த ஆண்டு ஜனவரியிலோ செவ்வாயை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மிக இளைய இதய நோயாளிக்கு பைபாஸ் சிகிச்சை

உலகின் மிக இளைய இதய நோயாளிக்கு பை பாஸ் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. அது வெற்றிகரமாக முடிந்தது. ஜம்முவைச் சேர்ந்தவர் இராஜேஷ்குமார் (வயது 12) இதய நோயால் பாதிக் கப்பட்ட அவனுக்கு கடந்த ஆண்டு பை பாஸ் சேர்ஜரி நடந்தது. அவனது சகோதரர் முகேஷ் (வயது 17). இவனும் ஒரு இதய நோயாளியாவான். இவனுக்கு பை பாஸ் மற்றும் மாற்று வால்வு பொருத்தும் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அத்தகைய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் உலகிலேயே இவர்கள் தான் வயதில் மிகவும் இளையவர்கள் என்று கூறப்படுகிறது. அந்த இரண்டு பேருக்கும் அப்பல்லோ மருத்துவமனை டாக்டர்கள் ஜி.கே.மணி,வீ. ஹரி ஹரன் ஆகியோர்தான் அறுவைச் சிகிச்சை செய்தனர். அவர்களது உடல்நிலை தற்போது சீராகவுள்ளது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். இந்தத் தகவலை அப்பல்லோ மருத்துவமனை தலைவர் டாக்டர் பிரதாப் சி.ரெட்டி மற்றும் டாக்டர் கே.எஸ்.ரெட்டி ஆகியோர் டில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

## சூரிய ஒளியில் இயங்கும் விமானம்

சூரிய சக்தியால் இயங்கும் ஆளில்லா விமானங்களைத் தயாரிப்பதில் பங்கேற்குமாறு இந்திய நிறுவனங்களுக்கு அமெரிக்க நிறுவனமான "ஸ்டார்காம் இன்டர் நேஷனல்" வேண்டுகோள் விடுத்துள்ளது.

புளோரிடாவிலுள்ள இந்த நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் அப்ரஹம்சன் இந்த அழைப்பை விடுத்துள்ளார். விமானக் கட்டுமானம் மற்றும் தொழில்நுட்பப் பணியில் கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ள ஆர்வமாக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உயரத்துக்கு ஏற்றவாறு வெப்பநிலை மாறாத பகுதியில் பறக்கும் ஆற்றலைக் கொண்டதாக இந்த விமானம் இருக்கும். 19,700 மீட்டர் உயரத்துக்குப் பறக்கக் கூடியதாகவும் 1,180 கிலோ சுமையைக் கொண்டு செல்வதற்கும் இந்த விமானம் பயன்படும் என ஜேம்ஸ் அப்ரஹம்சன் கூறியிருக்கிறார்.

# யாழ். ஊடகவியலாளர் மீதான தாக்குதல்

# இல. தமிழ் ஊடகவியலாளர் கண்டனம்

## நட்டஈடு தருமாறும் கோரிக்கை

**யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியில் வைத்து கடந்த சனிக்கிழமை அன்று தமிழ் ஊடகவியலாளர் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேட்டுள்ளது.**

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவேண்டும். அதுதுடன் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நெல்லியடி, கொக்குவில் ஆகிய இடங்களில் ஏற்கனவே நான்கு ஊடகவியலாளர்களும், யாழ். மாம்பழம் சந்தியில் ஐந்து ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டு காயமடைந்திருக்கின்றார்கள். அவர்களின் படப்பிடிப்புக் கருவிகளும சேதமாக்கப்பட்டிருக்கின்றன. போர் நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் ஒன்பது ஊடகவியலாளர்கள் சிறிலங்காப் படையினரால் தாக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பு, வவுனியா பிரதேசங்களிலும் ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்களுக்கு எதிரான இத்தகைய அராஜகத்தை தடுத்து நிறுத்த சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புக்கள் முன்வர வேண்டும் என பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்ட எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பு, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு உட்பட சாவதேச ஊடகவியலாளர் அமைப்புக்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலும், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக சிறிலங்காப் படைகளால் தாக்கப்பட்டு வருகின்றபோதிலும் சிறிலங்கா அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க முன்வரவில்லை. இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே, தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்துவதற்கும், தாக்குதல்களை நடத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச ஊடக அமைப்புக்களிடமும், மனித உரிமை அமைப்புக்களிடமும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. (32)

# சிஹல உறுமய கிழக்கில் ஊர்வலம் போனது இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கே

## அஸ்கிரிய பீட பேராசிரியர் தம்மாலோக்க தேரர் கண்டனம்

(கொழும்பு)

கிழக்கு பகுதிக்கு பாதயாத்திரை செய்ய வேண்டாம் பாதயாத்திரை தடைசெய்யப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருந்த போதும் சிஹல உறுமய கட்சிக்கு அறிவிப்பு விடுத்துள்ள போதிலும் அதை நிராகரித்து. ஊர்வலம் சென றது. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அல்ல, நாட்டில் மீண்டும் இனவாதத்தை தூண்டி இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கே ஆகும்என அஸ்கிரிய பீட பேராசிரியர் தம்மா லோக்க தேரர் கூறியுள்ளார்.

நாட்டில் அதே மக்கள் சமாதானத்தை விரும்புகின்ற நேரத்தில் சிஹலஉறுமய போன்ற சிறு பகுதியினர் சமாதானத்தைக் குழப்புவது நாட்டிற்கு நல்லதல்ல. வடகிழக்கிற்கு சமஷ்டி ஆட்சி கொடுப்பதற்கு தற்பொழுது அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் எடுக்கும் பொழுது அதை குழப்புவதே எதிர்க்கட்சிகளின் நோக்கம். இது வழமையாக நடைபெறுகிறது. இது நல்ல அரசியல் வாதிகளுக்கு அழகல்ல. சிறுபிள்ளைத்தனமான அரசியல் நோக்கம் கொண்டவர்களே இம் மாதிரியான காரியங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நாட்டில் கடந்தகால சரித்திரங்களை எடுத்துக் கொண்டால் சிங்கள,தமிழ், முஸ்லிம் மக்கள் மிக ஒற்றுமையாக வாழ்ந்து வந்திருக்கின்றனர், அந்த நேரத்திலும் இவைகளைக் குழப்பி இனவாதத்தை நாட்டில் துவக்குகின்றனர் என்று அஸ்கிரிய பீட தம்மாலோக்க தேரர் மேலும் கூறியுள்ளார்.

# தானிய இலட்சுமி கமத்தில் விவசாயம் செய்ய அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபையின் தானிய இலட்சுமி கமத்தில் ஏற்கனவே விவசாயம் செய்தவர்கள் 2003-2004 காலபோகத்திற்கு மாத்திரம் தொடர்ந்தும் வழமைபோல விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனரென கிளி. கரைச்சிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். இது குறித்து மேலதிக விபரம் தேவையெனில் தயவு செய்து தம்முடன் தொடர்பு கொள் ளும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பத்தாம் ஆண்டு நிறைவு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல் வியியற் கல்லூரி பத்தாம் ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பல நோக்கு மண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆண்டு நிறைவு விழா நிகழ்விற்கு பீடாதிபதி திரு.க. பேர்ணாட் அவர்கள் தலைமை தாங்குவார். இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளினதும் பிரதம ஆணையாளர் செல்வி. D.R.E. கஜநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இக்கல்வியியற் கல்லூரி இதுவரை ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை உருவாக்கியமையை சிறப்பித்து "வித்தியா தீபம்" என்ற நூல் வெளியீடும் இடம்பெறும். (10)

## தீ விபத்தில் மூவர் பலி!

கண்டி தெல்தெனியவில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 வயதுச் சிறுவன், 7 வயதுச் சிறுமி மற்றும் அவர்களின் 55 வயது தந்தை ஆகியோர் பலியாகினர். குப்பி விளக்கு ஒன்றினால் ஏற்பட்ட தீ பரவலே இந்த மரணங்களுக்கு காரணமாகும். (32)

## சிறுவனை காணவில்லை

விளையாடிக் கொண்டிருந்த தர்சன் (12 வயது) சிறுவன் கடந்த 13 ஆம் திகதி கச்சாய் பகுதியில் காணாமற் போயுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (33)

## சமுகம் தரவும்

கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து 2004 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரண்டாம் தடவையாகத் தோற்றவுள்ள சகல பரீட்சார்த்திகளும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அடையாள அட்டையுடன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுக்கொள்கின்றார்.

## குளம் புனரமைப்பு

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் வள்ளிபுனம் நடனமிட்டான் குளம் புனரமைப்பு வேலைகள் வள்ளிபுனம்- தேவிபுரம் (அ) பகுதி மக்களால் செய்யப்படுகிறது. ஒவ்வொருநாளும் சுமார் 150 மக்களுக்கு மேல் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பை செய்கின் றனர்.

இதனை இருபகுதி கிராம சேவையாளர்களும் தேசிய எழுச்சிப்பேரவைசெயலாளர்கள் இருவரும்வழிநடத்திச் செய்கின்றனர். வள்ளிபுனம்-உடையார்கட்டு வலயப் பொறுப்பாளர் தி.மயூரன் மேற்பார்வையுடன் இது இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (19,26)

# வேலை வாய்ப்பு தருவதாக மோசடி; ஏமாற்றியவர்கள் விளக்கமறியலில்

(வவுனியா செய்தியாளர்)

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி பலரிடம் பணம் பெற்றதாக கைதான இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடு ஒன்றில் ஆரம்பிக்கப்பட உள்ள தனியார் வங்கி ஒன்றில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி வவுனியாவில் நான்கு பேரிடம் இருபது லட்சம் ரூபா பணத்தினைப் பெற்று ஏமாற்றிய இரு சிங்கள இளைஞர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததனால் நேற்று முன்தினம் அவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இவ்விரு இளைஞர்களையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி திரு.இளஞ்செழியன் அவர்கள் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (10)

# மாணவியைக் கடத்திய இருவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொஸ்கொட எனும் இடத்தில் பாடசாலை மாணவி ஒருவரைக் கடத்தி 25 இலட்சம் ரூபா பணயப் பணம் கோரிய இருவருக்கு களுத்துறை நீதிமன்று ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இவர்களில் ஒருவர் விசேட அதிரடிப்படையில் கடமை யாற்றியவர் எனவும், மற்றையவர் ஆயுர்வேத வைத்திய மாணவன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை கடந்த புதனன்று களுத்துறை மேல்நீதிமன்றில் நடைபெற்ற போது இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (32)

# காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள் இடம்பெயர் சேவை

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலும் (20ஆம் திகதி சாந்தபுரத்திலும், 21ஆம் திகதி ஸ்கந்தபுரத்திலும்) 22ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலும் வடக்கு-கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அவர்களது இடம்பெயர் சேவை நடைபெறவுள்ளதால் காலம் கடந்த பிறப்பு/இறப்பு பதிவுகள் மேற்கொள்ளவிரும்பின் தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு இத்திகதிகளில் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கக் கூடியவகையில் பூரணப்படுத்தி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதுடன் வேறு பிரதேச செயலர் பிரிவில் உள்ளவர்களும் இத்திகதிகளில் இச்சேவையை பெற முடியும் எனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

# நிறுத்தப்பட்டிருந்த பேருந்து மீது ஹைஏஸ் வாகனம் மோதியது

## -சிறுமி ஒருவர் காயம்



(அலுவலகசெய்தியாளர்)

நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் பேருந்தின் மீது பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் மோதியசம்பவம் கடந்த புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைமைச் செயலகத்திற்கு முன்பாக ஏ-9 நெடுஞ்சாலையில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் ஹைஏஸ் வாகனத்தின் முன்பகுதி சேதமாகியதுடன் வாகனத்தில் பயணித்த சிறுமி ஒருவர் சிறுகாயங்களுக் குள்ளானார்.

மேற்படி விபத்துக் குறித்து தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# இராணுவக்கெடுபிடிகள் அதிகரிப்பு மட்டக்களப்பு மக்கள் கவலை

மட்டக்களப்பு நகரில் தற்போது சிறிலங்கா இராணுவத்தினரின் சோதனைகள் மிகவும் அதிகரித்து வருகின்றது. மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டியில் செல்வோர்களை இறக்கி அனுமதிப்பத்திரம் கேட்டு சோதனை செய்வதோடு வாகனங்களையும் தட்டித் தடவுகின்றனர். அத்தோடு, பாதசாரிகள் கொண்டு செல்கின்ற பொதிகள் அனைத்தையும் சோதனை செய்கின்றனர். வவுணதீவுச் சோதனைச் சாவடியூடாக மட்டக்களப்பு நகரிற்குச் செல்லுகின்ற பிரயாணிகள் மோட்டார் சைக்கிள் இலக்கம், அடையாள அட்டை இலக்கம் என்பன பதியப்படுவதோடு அவர்களின் பொதிகளும் சோதனை செய்யப்படுகின்றன.

சமாதானச் சூழலில் இவ்வாறான நடவடிக்கையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட நேரத்திற்குள் அரச உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# குமுதினிப் படகு சேவையிலிருந்து இடை நிறுத்தம்

# நெடுந்தீவு பயணிகள் பெரும் அசௌகரியம்


(நெடுந்தீவு)

நெடுந்தீவிற்கான ஒரே ஒரு பாதுகாப்பான பயணிகள் சேவைப் படகான குமுதினி சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், தற்போது கூடாரம் இல்லாத திறந்த படகே போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது. தற்போது மழை பெய்வதால் இப்படகில் பயணம் செய்யும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

குமுதினிப் படகு எதிர்வரும் சனவரி மாதமே சேவையில் ஈடுபடுத்தப்படு மெனக் கூறப்படுகின்றது.

தற்போது நெடுந்தீவிற்கான போக்குவரத்துச் சேவையில் ஒரு படகு மட்டுமே ஈடு பட்டுள்ளது. இப்படகே பொருட்களை யும், பயணிகளையும் நெடுந்தீவிற்கு கொண்டு செல்கின்றமை குறிப்பிடத் தக்கது.




## 26ஆவது பிறந்த நாளில்... 7ஆம் ஆண்டு நீங்காத நினைவில்...

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 18 • 10 • 1977 |  | 03 • 10 • 1996 |

### 2ஆம் லெப். தமிழ்நெஞ்சன்


(பாலசுப்பிரமணியம் அமரதாஸ்)

தாயக மண்ணின் விடிவிற்காய்
தானைத் தலைவன் வழி நடந்து
தன்னுயிரை மண்ணிற்கு உரமாக்கிய
தமிழ்நெஞ்சனே கனவுகள் விடியலாகுமோர் நாள்

231, ஜெயபுரம் வடக்கு,
பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம் (சி-8659)

என்றும் உன் நினைவில்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், மருமக்கள்,
அத்தான்மார்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவு நாளில்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 12 • 03 • 1975 |  | 18 • 10 • 2000 |

### மேஜர் ஆதவன்

*(முத்துச்சாமி சிவகணேசன் – முரளி)*

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.

பகைகள் வாழ்விடங்கள் புகுந்து
பல்வகை தரவு ஆய்ந்து
வகை வகை ஆயுதங்கள்
வந்து எம் கையில் சேர
நகைத்து நீ வழியே காட்டி
நடந்த போர் பலமாக்கி
விதையென மண்ணில் வீழ்ந்த
வீரனே வாழ்வாய் நெஞ்சில்

தற்போதைய முகவரி:
முத்துமாரியம்மன் கோவில் வீதி,
02ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (3101)

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்,
சி.முத்துச்சாமி



## புதுக்குடியிருப்பு-குமுழமுனை பேருந்துப் பணி,
## புதுக்குடியிருப்பு-குமுழமுனை- தாமரைக்கேணி



# பணியாக மாற்றம்

மேற்படி பேருந்துப் பணி 20-10-2003ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் புதுக்குடியிருப்பிலிருந்து தொடங்கி குமுழமுனை, தாமரைக்கேணி வழித்தடத்தில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**நேர ஒழுங்கு:**

**புதுக்குடியிருப்பு - தாமரைக்கேணி**

| புதுக்குடியிருப்பு | வற்றாப்பளை | முள்ளியவளை | காட்டாவிநாயகர்சந்தி | கணுக்கேணி | குமுழமுனை | தாமரைக்கேணி |
|---|---|---|---|---|---|---|
| மாலை 02.30 | 03.15 | 03.30 | 3.35 | 03.45 | 04.15 | 04.30 |

**தாமரைக்கேணி - புதுக்குடியிருப்பு**

| தாமரைக்கேணி | குமுழமுனை | கணுக்கேணி | காட்டாவிநாயகர் சந்தி | முள்ளியவளை | வற்றாப்பளை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.15 | 07.30 | 08.00 | 08.10 | 08.15 | 08.30 | 09.15 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-8660)



### சிந்தனைக்கு

மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைகள் தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-10-2003

## தோல்வியில் முடிந்த முயற்சி!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் எடுத்த ஒரு நீண்ட இராஜதந்திர முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது போல் தெரிகின்றது. இவர்கள் திருகோணமலைத் துறைமுகத்திற்குப் புலிகளால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என இந்தியாவை நம்பச் செய்ய மேற்கொண்ட முயற்சியே தோல்வியில் முடிவடைந்ததற்கான அறிவிப்புக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

சிறிலங்காவிற்குக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா "திருகோணமலைத் துறைமுகத்திற்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்களை இந்தியா ஏற்கவில்லை" என வெளிப்படையாகவே அபிப்பிராயம் வெளியிட்டமையானது இவ் இராஜதந்திர முயற்சியின் தோல்வியையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

பொ. ஐ. முன்னணியைப் பொறுத்து குறிப்பாக சனாதிபதியும், லக்ஷ்மன் கதிர்காமரும், அனுரா பண்டாரநாயக்கவும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நேரடித் தலையீட்டை ஏற்படுத்துவதற்கென நீண்டதொரு இராஜதந்திர செயல் முறையில் இறங்கியிருந்தனர். இலங்கை அரசியலில் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு நகர்வையும் அவர்கள் இந்தியாவிற்கு விளக்குமுற்பட்டது மட்டுமல்ல, அவ் ஒவ்வொரு நகர்வும் இந்திய நலனுக்குப் பாதகமானவையாக அமையும் என வற்புறுத்தியும் வந்தனர். இதன் நிமித்தம் இந்திய மாநில அரசுகள் மாநிலத்தில் நெருக்கடிகள் ஏற்படும்போது டில்லி விரைவது போன்றும், அங்கு முறையிடுவது போன்றும் இவர்களும் (லக்ஷ்மன் கதிர்காமர், அனுரா பண்டாரநாயக்க) ஒவ்வொரு சம்பவங்களின்போதும் டில்லி விரைந்தனர்.

இந்த வகையில் இவர்கள் இறுதியாக கையில் எடுத்துக் கொண்ட விவகாரம் திருகோணமலைத் துறைமுகம் பற்றியதாகும். இவ்வாறு திருகோணமலைத்துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்த விடயத்தைக் கையில் எடுத்துக் கொண்டமைக்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அதாவது, திருகோணமலைத் துறைமுகம் பற்றிய பேச்சானது சர்வதேச நாடுகளின் கவனத்தினை விரைவிலேயே கவரும் என்பதினாலேயே ஆகும். ஏனெனில், திருகோணமலைத்துறைமுகத்தினால் சிறிலங்கா அரசு மட்டுமல்ல, சர்வதேச அரசுகளும் அனுகூலங்களை அடைகின்றன.

அதிலும் குறிப்பாக, இந்திய அரசு இவ்விடயத்தில் தீவிர அக்கறை கொள்வதற்கான வாய்ப்பு உண்டு. ஏனெனில், வங்காள விரிகுடாவை நோக்கியதான ஒரு இயற்கைத் துறைமுகம் விடுதலைப்புலிகளின் கையில் சென்றடைவதை அது விரும்புவதாக இருக்க முடியாது. அது மட்டுமல்ல, சிறிலங்காவிடம் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள எண்ணெய்க் குதங்கள் திருகோணமலைத்துறைமுகப்பகுதியிலேயே உள்ளது. ஆகையினால், திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு என்பது இந்திய அரசின் நலனுக்கும் இடையூறாக இருக்கும் என்பதே இவ்விடயத்திற்கு முக்கியமளிக்கக் காரணமாகும்.

இந்நிலையில்தான், இந்தியாவை இவ்விடயத்தில் சிக்கவைப்பதன் மூலம் தமது அரசியல் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ள சனாதிபதி சந்திரிகா முற்பட்டு நிற்கின்றார். ஆனால், கொழும்பு வந்த ஜஸ்வந்த் சிங்ஹா சனாதிபதி சந்திரிகாவின் எதிர்பார்க்கைக்கு முற்றுப் புள்ளி வைப்பது போன்று பேசியுள்ளார்.

இதேவேளை ஜஸ்வந்த் சிங்ஹாவின் பேச்சானது திருகோணமலைக்குப் புலிகளால் ஆபத்து ஏற்படவில்லை என்பதை மட்டுமல்ல, சிறிலங்கா அரசு குறித்து இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறலாம். அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு இந்திய மத்திய அரசு வெளிப்படையாக ஆதரவு எதனையும் வழங்குவதற்கு இல்லை என்பதே அது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா கொழும்பிற்கு வந்து சேரும் முன்னரே ரணில் அரசாங்கத்திற்கு தமது நட்புறவை வெளிப்படுத்தும் அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தார் என்றே கொள்ளலாம். அதாவது, இலங்கையில் கால் பதிக்கும் முன்னரே இந்திய நாணயப்படி 300 கோடி ரூபாக்களை சிறிலங்காவிற்கு உதவும் நோக்கில் வழங்குவதாக அறிவிப்புச் செய்துவிட்டே வந்தார்.

இதனை ரணில் அரசாங்கத்துடனான நல்லெண்ணத்திற்கான குறிகாட்டியாகவே கொள்ளலாம். இதேவேளை, ரணில் அரசாங்கமும் இந்தியா தொடர்பான விடயத்தில் மிகவும் கரிசனையுடனும், அக்கறையுடனும் செயற்பட்டே வந்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் உட்பட முக்கிய அரசியல் மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகள் யாவும் சிறிலங்காப் பிரதமரினாலும், அமைச்சர்களினாலும், இராஜதந்திரிகளாலும் இந்தியாவிற்குக்கூறப்பட்டே வந்துள்ளது. இன்னும் சில தினங்களில் கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், இந்திய அரசாங்கம், ரணில் விக்கிரமசிங்க அரசிற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்ளுதல் என்பது தேவையற்றதும், அர்த்தமற்றதுமாகும். அது மட்டுமல்ல, இன்று ரணில் அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்ளுதல்– அதாவது சனாதிபதியின் கையைப் பலப்படுத்த முனைவது சமாதான முயற்சிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடாகவே சர்வதேச ரீதியில் நோக்கப்படும்/ விமர்சிக்கப்படும் இந்நிலையில்தான் இந்தியா சமாதான முயற்சிகளில் கரிசனை கொண்டுள்ளதோ இல்லையோ தன்னை சமாதானத்தின் விரோதியாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. இதுவே சனாதிபதி – லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுற்றமைக்குக் காரணமாகும்.

### வலி. வடக்கில் சில பகுதிகளில்

# மீளக் குடியேறிய மக்களை படையினர் எந்நேரமும் வெளியேறத் தயாராக உத்தரவு

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு 600 மீற்றருக்கு அப்பால் மீளக் குடியேற்றப்பட்ட பொதுமக்களை எந்தநேரமும் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற தயாராக இருக்குமாறு சிறிலங்காப் படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக் கைச்சாத்தான பின்னர் வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள தெல்லிப்பளை, இளவாலை, பன்னாலை ஆகிய இடங்களின் சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியேற்றத்திற்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி பன்னாலை சிவபூதராஜர் கோவிலடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் 200 குடும்பங்கள் மீளக் குடியேற்றப்பட்டிருந்தன. இவர்களையே இப்பொழுது எந்த நேரமும் வெளியேறத் தயாராக இருக்குமாறு படையினர் எச்சரித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் தற்போது தமிழ்க் கலவன் பாடசாலை, தபாற்கந்தோர், கூட்டுறவுச் சங்கம் என்பன இயங்குவதுடன் பதினைந்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயச் செய்கையும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு அடுத்த வருட முற்பகுதிக்கு ஒத்திப் போடப்படலாம்

### சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை பெரும்பாலும் அடுத்த வருடமுற்பகுதிக்கு ஒத்திப் போடலாம் என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் ஆரம்பகட்ட பேச்சு நவம்பர் மாதமோ டிசம்பர் மாதமோ நடைபெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எங்கு, எப்போது நடைபெற வேண்டும் என்பதை எதிர்வரும் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் தீர்மானிக்கப்போவதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கு கொள்ள வழி வகுப்பது தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தும் என அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான தமது யோசனைகளை இம்மாத முடிவிற்குள் விடுதலைப் புலிகள் பூர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றிற்கும் அரசாங்கத்தின் யோசனைக்கும் வேறுபாடுகள் இருந்தாலும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது இடைவெளியை முடிந்தளவு குறைக்க எண்ணியுள்ளோம். ஆனால் மாற்று யோசனைகளை சமர்ப்பிக்கும் திட்டம் அரசாங்கத்திற்குக் கிடையாது என்று குறிப்பிட்டார்.

# அமைச்சின் அனுமதியின்றி மாணவர்களை பொது நிகழ்வுகளுக்கு கூட்டிச் செல்லத்தடை

(கொழும்பு)

கல்வி அமைச்சின் அனுமதியின்றி பொது நிகழ்வுகள் மற்றும் பேரணிகளுக்கு பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்வது தடை செய்யப்படவுள்ளதாக சிறிலங்காவின் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை நேரத்தில் மாணவர்களை இத்தகைய நிகழ்வு ஒன்றிற்கு அழைத்துச் செல்வதாக இருந்தால் கல்வியமைச்சிடம் முன்கூட்டியே அனுமதி பெறப்பட வேண்டும் என்று சிறிலங்காவின் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

கலாச்சார பாரம்பரியங்களுடன் தொடர்புபட்ட நிகழ்வைத் தவிர இத்தகைய நிகழ்வு ஒன்றுக்கும் இனிமேல் பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா விடுவதா சிறி.மு.கா. ஆலோசனை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லாத தீர்மானம் பற்றி கலந்தாலோசிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் செயற்குழு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுப்போமா இல்லையா என்று தீர்மானம் இதில் முடிவு எடுக்கப்படவுள்ளது. கடைசித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னதாக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பற்றி மிக அவதானமாக பரிசீலனை செய்ய வேண்டி உள்ளதென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# அரை மணிநேரம் கடும் மழையால் முள்ளியவளையில் வெள்ளம்

### வர்த்தக நிலையங்கள் பாதிப்பு

அரைமணி நேர கடும்மழை வெள்ளத்தினால் முள்ளியவளைப் பகுதியில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பி.ப 2.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை பெய்த கடும் மழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டு முள்ளியவளை பொதுச் சந்தை மற்றும் சந்தைப் பகுதிகளை அண்மித்த பிரதான வீதி ஓரங்களில் அமைந்துள்ள 9 வர்த்தக நிலையங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்து சேதம் ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி பிரதான வீதி புனரமைப்புக்கள் ஆரம்பித்து வீதிக்கு கிரவல் பரவப்பட்ட போதிலும் வடிகால் மதகுகள் தூர்த்து எடுக்காமையும் மேலதிக மதகு அமைக்கப்படாததினாலுமே வெள்ளம் பொதுச்சந்தைப் பகுதியை மூடியதாக தெரிவித்த வர்த்தகர்கள் தொடர்ந்து இனிவரும் காலம் மழை காலம் என்பதால் உடன் மதகு வேலைகளையும், வடிகால் அமைப்பு வேலைகளையும் செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளனர். (ஆ)

# ஆனந்தராஜா மீதான குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை

### – உள்துறை அமைச்சின் செயலர் அறிக்கை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையென உள்துறை அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவர் தனது அறிக்கையை நேற்று சனாதிபதியிடம் கையளித்துள்ளதாக அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ் அறிக்கையில் ஆனந்தராஜாவிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குத் தெளிவான ஆதாரங்கள் எவையும் இல்லையென கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதவியிலிருந்து இளைப்பாறியுள்ள பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா.

# கிளி.யில் உலக விவசாயிகள் தினம் திங்களன்று கடைப்பிடிக்க ஏற்பாடு

(ஒட்டுசுட்டான்)

உலக விவசாயிகள் தினம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியன இணைந்து நடாத்தும் மாபெரும் உலக விவசாயிகள் தினம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கள் ஒன்றிணைந்த ரீதியாக நடைபெறவுள்ள உலக விவசாயிகள் தினத்தில் விவசாயிகளை கௌரவித்து அழைத்து வருதல், சிறந்த விவசாயிகளுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவித்தல் என்பன நடைபெறவுள்ளது. (05)

# வீதிச்சோதனை ரோந்தில் கொழும்பில் 133பேர் கைது

சிறிலங்கா இராணுவமும் பொலிசாரும் கொழும்பில் இணைந்து நடாத்திய தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 133 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்தத் தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரை நடைபெற்றது. இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களென பொலிசார் தெரிவிக்கின்றனர். வீதிச் சோதனை, ரோந்து நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

# கனடாவில் அகதி அந்தஸ்துக் கோரியுள்ள தமிழ்க் கைதிகளைத் திருப்பி அனுப்பமாட்டோம்

## கனடா வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கனடாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ள ஈழத்தமிழர்களை திருப்பி அனுப்புவதில்லை என்று கனடிய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். ஐ.நா. யாழ். அலுவலகத்தில் உள்ளூர் பிரதிநிதிகளுடன் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ளார். 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கனடிய அரசாங்கம் உதவிகளைச் செய்து வருவதாக அமைச்சர் பில்கிரகாம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மக்கள் சொல்லும் தகவல்களுக்கும் கொழும்பிலுள்ள பிரதிநிதிகள் சொல்லும் தகவல்களுக்குமிடையே பெரும் முரண்பாடு காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# ரணிலுக்கு எதிரான விவாதம் 23ம் திகதி நடைபெறும்

சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கெதிரான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதேவேளை எதிர்கால பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவது குறித்த விவாதமும் 21ஆம் திகதி நடக்கவிருக்கின்றது. இவ்விருவிவாதமும் காலையிலிருந்து மாலைவரை நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

## - வங்கிக் கொள்ளை முயற்சி

# துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உட்பட இருவர் பலி!

(கொழும்பு)

மாத்தறை நகரில் நேற்று சமுர்த்தி வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளை முயற்சியின் போது இருவர் பலியாகினர். இதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவார். கொள்ளையர்களுக்கும், பொலிசாருக்கும் இடையில் துப்பாக்கி சண்டை இடம்பெற்று இறுதியில் கொள்ளையர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதன் போது அவரின் கையில் இருந்த கைக்குண்டு வெடித்த போது அவரும் பொலிஸ் உத்தியோகத்தரும் பலியாகினர். (32)

# கோப்பாய் அரசினர் வைத்தியசாலை காச நோய் பிரிவை மூடக்கோரி மறியல்!

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சூழலில் இயங்கிவரும் காசநோய் சிகிச்சைப் பிரிவை மூடக்கோரி அப்பிரதேச மக்கள் மறியல் போராட்டமொன்றை நேற்று மேற்கொண்டனர்.

.மக்கள் குடியிருப்புக்களிடையே அமைந்துள்ள இக்காசநோய் சிகிச்சைப் பிரிவால் அப்பிரதேச மக்களுக்கும் நோய்த் தொற்றல் ஏற்படலாமென அச்சந் தெரிவித்து அச்சிகிச்சைப் பிரிவை மூடிவிடுமாறு அப்பிரதேச மக்கள் முன்னரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்திருந்தனர்.

ஆயினும் குறித்த கட்டடத் தொகுதியிலேயே காச நோய் சிகிச்சைப் பிரிவு தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. இந்நிலையில் உரிய சுகாதார மற்றும் சுத்திகரிப்பு ஏற்பாடுகள் ஏதுமற்ற நிலையில் அங்கிருந்த மனிதக் கழிவுகள் வெளியேறிய வண்ணமுள்ளது. இதனால் அப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தெரிவிக்கின்றனர். அத்துடன் நோய்த தொற்றல் உள்ள இச்சூழலில் குழந்தைகளுக்கான "போலியோ சொட்டு மருந்து" வழங்கும் பணியும் இடம்பெற சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிற்பகல் 2.30 மணியளவில் திரண்ட நூற்றுக்கணக்கான பிரதேச வாசிகள் வைத்திய சாலையில் பிரதான வாயிலை மறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை அங்கு வருகை தந்திருந்த வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகளையும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் வெளியேற அனுமதித்திருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து மேற்படி காச நோய் சிகிச்சை நிலையத்தை ஒரு வார காலப்பகுதியினுள் பொருத்தமான இடத்திற்கு மாற்றஞ் செய்வதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த மறியல் போராட்டத்தை அவர்கள் விலக்கிக் கொண்டனர்.

வலி.வடக்கின் மயிலிட்டிப் பகுதியில் முன்னர் இயங்கி வந்த குறித்த காச நோய் சிகிச்சைப்பிரிவு, இராணுவ நடவடிக்கைகளாலும், அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகவும் இடம்பெயர்ந்த நிலையில், கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின், வைத்திய அதிகாரி விடுதியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிப்போட்டி நாளைநடைபெறும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடாத்தும் மின்னொளியிலான மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நாளை மேற்படி கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதவுள்ளது.

இதேவேளை முன்னதாக விக்கினேஸ்வரா அணிக்கும் யாழ்.சென்அன்ரனீஸ் அணிக்கும் இடையிலான சினேகபூர்வ ஆட்டம் நடைபெறவுள்ளது.

## போராட்டத்தில்...

நடவடிக்கையில் முன்னெடுத்து வருகின்றோம். ஆனால் நாம் பலாத்காரமாக ஆட்களைசேர்ப்பதாக சில ஊடகங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றன. நாம் தினமும் எம்மை நோக்கிவரும் சிறுவர்களைத் திருப்பி அனுப்புகிறோம். அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் காரணமாகவே யுனிசெவ் முன்னிலையில் சிறுவர்களை விடுதலைசெய்திருக்கின்றோம் என்றார். யுனிசெவ் பிரதிநிதி இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் 13 சிறார்களை அவர்கள் விடுதலைசெய்து மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கும் இந்நிகழ்வு மகிழ்ச்சிக்குரியது. வாழைச்சேனையில்-சேர்ந்ததாகக் கூறப்படும் நான்கு சிறுவர்களை விடுவிக்கும்போது பெற்றோர்களிடம் சேர்ந்து மகிழ்சியாக வாழவேண்டும் என்றார்.

இதேவேளை இன்று அம்பாறை மாவட்டத்தில் ஏழு சிறுவர்கள் யுனிசெவ் பிரதிநிதிகள் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## - கிளி.மகாவித்தியாலயத்தில் -

# வேளாண் பொறிகள் குறித்த செயல் விளக்கம் அளித்தல்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரின் வேளாண் உள்ளீடுகள், மற்றும் வேளாண் பொறிகள் இறக்குமதி செய்யும் கம்பனியினரால் செயல் விளக்கம் அளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள வேளாண் பொறிகள், கருவிகள் மற்றும் உள்ளீடுகள் பாவிப்புச் சம்பந்தமான செயல்முறை விளககத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து நவீன தொழில்நுட்ப விளக்கங்களை அறிந்துகொள்ளும் வண்ணம் வன்னி வேளாண் தொழில நுட்ப நிறுவன மேலாளர் இ.புவனேஸ்வரன் வேண்டியுள்ளார். (சோ)

## கிளிநொச்சி..

டுப்பாடற்ற பிரதேசங்களிலிருந்து எந்த ஒரு ஆற்றுகையோ அல்லது கலை இலக்கியப் படைப்பாளிகளின் உணர்வுகளை வெளிப்படுத்தும் உரைகளோ பிரதிநிதித்துவப்படுத்த படாமை எமக்கு மிகவும் வேதனை தருகிறது. அத்தோடு வடகிழக்கு மகாணத்துக்கு உள்ளடங்களாகவே கிளிநொச்சி முல்லைத்தீவு என்பன அடங்குகின்றது. என்பது உண்மையே. யுத்த கொடூரங்கள் நிறைந்த காலப் பகுதியில் இம் மாவட்டங்களிலிருந்து உலகம் வியக்கும் கலை இலக்கிய படைப்புக்களும் ஆற்றுகை வெளிப்பாடுகளும் வெளிவந்திருக்கின்றன. ஆனால் தங்களது விழாச் செயற்பாட்டுக்குழுவுக்கு இவ்விடயம் ஏன் புரியவில்லை என்பது எமக்கு தெரியாமல் உள்ளது இச்செயற்பாடு திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட ஒரு விடயமாக இருக்குமோ என எம்மால் எண்ணத் தோன்றுகிறது. அத்தோடு, தமிழினம் இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்காகத் தம் உயிர்களைத் தியாகம் செய்தும் தமிழர் தம் வாழ்வை கேடயம் போல் கட்டிக் காத்தும் வரும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் எவரையும் இவ்விழாவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை எமக்கு மேலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இச்செயற்பாட்டிற்காக நாம் எமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கின்றோம்.

# தே. எழுச்சிப் பேரவையின் தீவகக் கோட்ட சங்கம நிகழ்வு

(தீவகம்)

தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு வேலணை துறையூரில் நடைபெற்றது. அதிபர் சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலர் சூ.சொலமன் சூசிறில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆகியோர் உட்பட தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர்.

தீவகத்தின் கலாச்சார முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொது அமைப்புக்களின் வலுவாக்கம் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உரிய...

தரப்புகள் இச்சந்திப்பு விடயத்தில் ஆர்வமற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்ட படைத் தலைமையுடன் மட்டுமே இடம்பெற்ற சந்திப்புத் தவிர வேறோர் தரப்புடனும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் சந்திப்புக்களை நடாத்தமையால் அவரது விஜயம் பயனற்றதோர் விஜயமாகவே அமைந்ததாக ஊடகவட்டாரங்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (27)

## நிமலராஜன்...

இப்போராட்டத்தில் கண்டன உரையும் இடம்பெற்றது. இக்கண்டன உரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சர்வதேச மாணவர் ஒன்றியத் தலைவர் கஜேந்திரன் முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சிவஞானம் ஆகியோர் நிமலராஜனின் படுகொலை வழக்கு இழுத்தடிக்கப்படுவதைக் கண்டித்து உரையாற்றினர். 10 மணிக்கு தகவல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்த உண்ணா விரதம் மதியம் வரை இடம்பெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சமயம் பாதுகாப்பு அமைச்சு கண்மூடி இருந்துவிட்டு சனாதிபதி சந்திரிகா குற்றவாளிகளை நீதி முன் நிறுத்தத் தவறியமைக்காக சந்திரிகாவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. ஊடகவியலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கொடும்பாவியை எரித்தனர். இதன் பின்னர் அரச அதிபரிடம் ஊடகவியலாளர் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். ஊடகத்துறை அமைச்சருக்கான இந்த மகஜர் அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது. இம்மகஜரில் நிமலராஜன் படுகொலை இழுத்தடிப்பும் நெல்லியடி, மானிப்பாய், அரியாலைப் பகுதிகளில் தமிழ்ப் பத்திரிகையாளர் மீதான தாக்குதலும் திட்டமிட்ட இனவாத நோக்கில் செய்யப்பட்டமை நீதித்துறை மீதோ அமைச்சு மீதோ எமக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில் நீங்கள் இனவாத நோக்கில் செயற்படுகின்றீர்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதியாக ஊடகவியலாளர் பதில் செயலாளரின் நன்றியுரையுடன் போராட்டம் முடிவுற்றது.

## அமைச்சர்கள்...

தாக சம்பந்தன் பிரதமரிடம் தெரிவித்தார். அரசாங்க சார்பில் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பு செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, விரிவுரையாளர் மென்டிஸ், உயர்கல்வி அமைச்சு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மா.வை சேனாதிராஜா, அப்பாத்துறை விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவசக்தி ஆனந்தன், துரைரட்ணசிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்ச்செல்வன்...

சட்டவல்லுநர்களுடனும் அயர்லாந்தில் ஆராய்ந்தனர்.

பின்னர் சின் பெய்ன் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிய அவர்கள் அங்கிருந்து நெதர்லாந்து சென்று பின்னர் நோர்வேக்கு சென்று பல சந்திப்புக்களை நடத்திய பின் இன்று வன்னி திரும்புகின்றனர்.

## விளையாட்டு...

ரீதத்தைப் புரிந்துகொள்ள முடியாத தம்பி அண்ணா நித்திரை போன்று விளையாடு கிறார் என நினைத்துவிட்டான். மயக்கமடைந்த கிரிசாந்தன் பரிதாபகரமாக உயிரிழந்தார். (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.